TAMIL

# பொதுச் சுகாதாரக் கவனிப்பை அணுகல்
## புகலிடம் கோரும், மெடிகேர் அட்டை இல்லாதவர்களுக்கானது

மெடிகேர் அட்டை இல்லாத, ஆஸ்திரேலியாவில் புகலிடம் கோருபவர்கள், நியூ சவுத் வேல்ஸ்-இல் உள்ள பொது மருத்துவமனைகளை இலவசமாகப் பயன்படுத்தலாம்.

மருத்துவமனைக்குச் செல்லும் ஒவ்வொரு தடவையும், தயவுசெய்து பின்வருபவற்றை ஊழியர்களுக்குச் சொல்லவும்:

- உங்கள் பெயர் மற்றும் பிறந்த திகதி
- உங்கள் தொடர்பு விவரங்கள்
- நீங்கள் புகலிடம் கோரும் நபர் என்பதை
- சர்வதேச சுகாதார மற்றும் மருத்துவ சேவை (International Health and Medical Service -IHMS), அல்லது நிலை தீர்மான ஆதரவு சேவைகள் (Status Resolution Support Services -SRSS) வழங்குநரிடமிருந்து, ஆதரவுஉதவி மற்றும் சுகாதார சேவைகளைப் பெறுகிறீர்கள் என்றால் அதைப்பற்றி

நியூ சவுத் வேல்ஸ் மருத்துவமனை ஒன்றிற்குச் செல்லும் ஒவ்வொரு தடவையும், நீங்கள் இந்தத் தகவல்களை வழங்க வேண்டியிருக்கும். மருத்துவமனைகள், தகவல்களை வழங்கப் பாதுகாப்பான இடங்கள் ஆகும். உங்கள் தனிப்பட்ட தகவல்களை உங்கள் அனுமதியின்றிப் பகிர ஊழியர்களுக்கு அனுமதி இல்லை.

நீங்கள் புகலிடம் கோருகிறீர்கள் என்பதைக் காட்டும் ஆவணம் ஒன்றைக் கொண்டு வாருங்கள். மருத்துவமனையில் சேவைகளைப் பெறுவதற்கு நீங்கள் பணம் செலுத்த வேண்டியதில்லை என்பதை இது உறுதி செய்யும். பின்வரும் ஆவணங்களில் ஒன்றையோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவையையோ கொண்டு வாருங்கள்:

- பிரிட்ஜிங் விசா E, அல்லது பிரிட்ஜிங் விசா A அல்லது C
- உங்களது தற்போதைய விசா நிலையை உறுதிப்படுத்தும் உள்துறை திணைக்களம் (Department of Home Affairs), குடிவரவு மதிப்பீட்டு ஆணையம் (Immigration Assessment Authority), நிர்வாக மேல்முறையீட்டு தீர்ப்பாயம் (Administrative Appeals Tribunal), அல்லது ஒரு நீதிமன்றம் (எ.கா. கூட்டாட்சி நீதிமன்றம்) ஆகியவற்றின் கடிதம்
- நிலை தீர்மான ஆதரவு சேவைகளின் (SRSS) கடிதம் அல்லது சர்வதேச சுகாதார மற்றும் மருத்துவ சேவை (IHMS) அட்டை (உங்கள் வருகைக்குரிய பணத்தை அவர்களே செலுத்த மருத்துவமனை ஏற்பாடு செய்யக்கூடும்)
- நியூ சவுத் வேல்ஸ் அகதிகள் சுகாதார சேவை (NSW Refugee Health Service), பிற நியூ சவுத் வேல்ஸ் அகதிகள் சுகாதார திட்டம், அல்லது STARTTS போன்ற சம்பந்தப்பட்ட சுகாதார சேவையின் கடிதம்



Suite 1, Level 3, 157-161 George Street, Liverpool NSW 2170 • PO Box 144 Liverpool BC NSW 1871
P: 02 9794 0770 • F: 02 9794 0790 • E: SWSLHD-RefugeeHealth@health.nsw.gov.au • www.refugeehealth.org.au

- அகதிகள் ஆலோசனை மற்றும் விவகார சேவை (Refugee Advice and Casework Service - RACS), குடிவரவு ஆலோசனை மற்றும் உரிமைகள் மையம் (Immigration Advice and Rights Centre), அல்லது சட்ட உதவி நியூ சவுத் வேல்ஸ் (Legal Aid NSW) போன்ற ஒரு சட்ட பிரதிநிதியிடமிருந்து பெற்ற ஆவணம்
- தஞ்சம் கோருவோர் மையம் (Asylum Seekers Centre), ஆஸ்திரேலிய செஞ்சிலுவை சங்கம் (Australian Red Cross), வரவேற்பு மன்றம் (House of Welcome), ஜேசுட் அகதிகள் சேவை (Jesuit Refugee Service), லைப் வித்தவுட் பரியர்ஸ் (Life without Barriers), அல்லது சர்வதேச குடியமர்வு சேவைகள் (Settlement Services International - SSI) போன்றவற்றிலிருந்து பெற்ற கடிதம்.

உங்களைக் கவனித்துக் கொள்ள எங்களுக்கு உதவ:

- உங்களிடம் உள்ள ஏனைய மருத்துவப் பதிவுகளையும் கொண்டு வாருங்கள்
- நீங்கள் எடுக்கும் மருந்துகளின் பட்டியலையும் கொண்டு வாருங்கள்
- உங்களிடம் ஒரு 'பரிந்துரைக் கடிதம்' இருந்தால், அதைக் கொண்டு வாருங்கள் (அவசர சூழ்நிலை என்றால் தேவையில்லை)
- உங்களுக்கு ஒரு மொழிபெயர்ந்துரைப்பாளர் தேவைப்பட்டால், நீங்கள் விரும்பும் மொழியை ஊழியர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். இது இலவசம் ஆகும்.


Suite 1, Level 3, 157-161 George Street, Liverpool NSW 2170 • PO Box 144 Liverpool BC NSW 1871
P: 02 9794 0770 • F: 02 9794 0790 • E: SWSLHD-RefugeeHealth@health.nsw.gov.au • www.refugeehealth.org.au